# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **O.S. No. 277/2014** | **Date : 28.11.2023** | **PW2** |
| Name: முத்து | S/o. **நல்லப்பன்** | |
| Evidence Recorded Time: 12.56 P.M. to 01.20 P.M | | |

**3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் தற்போது நினைவில்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை உள்ளது. மேற்படி குழந்தைகள் பிறந்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் வருடம் தெரியும், மாதம், தேதி தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் கிரைய பத்திரம் மூலம் கமலாவிற்கு பத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன், எந்த தேதி கிரைய பத்திரம் மூலம் கமலாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. பிரமாண பத்திரத்தில் எந்த தேதியில் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. பொது அதிகார பத்திரம் எந்த தேதியில் ஏறப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கமலாவின் குடும்பதினரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். கமலா எனக்கு உறவினரா என்றால் இல்லை, பழக்க வழக்கம் மூலம் தெரியும். கமலா எந்த கிராமத்தை சேர்ந்தவர் என்றால் மேச்சேரி கிராமம், கோல்காரனூர் எரப்பரெட்டியூரை சேர்ந்தவர் ஆவார். என்னுடைய முதல் விசாரணையில் தாவா சொத்து என்று சொல்லியுள்ளேன் தாவா சொத்து என்றால் என்ன என்றால் தெரியாது. என்ன சர்வே எண்ணில் எவ்வளவு நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த நிலத்தில் என்னென்ன உள்ளது என்றும் தெரியாது என்றால் சர்வே எண் தெரியாது, ஒரு ஏக்கர் நிலமாகும், அந்த நிலத்தில் மெத்தை வீடு உள்ளது. பொது அதிகார பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது என்பதால் படித்து பார்க்கவில்லை. வேறு யாரையேனும் படித்து காட்ட சொன்னேனா என்றால் இல்லை. அதனால் அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்துக்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு ஏக்கர் கணக்கில் பேசினார்கள

அல்லது செண்ட் கணக்கில் பேசினார்களா என்றால் செண்ட் கணக்கிற்கு பேசினார்கள். ஒரு செண்ட்டிற்கு ரூபாய் ஐந்தாயிரம் என்று பேசினார்கள். மொத்தமாக ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்று பேசினார்கள் என்றால் நிலத்திற்கு மட்டும் ஐந்து லட்சத்திற்கு பேசினார்கள், வீட்டிற்கு பேசவில்லை. அந்த நிலத்திற்கு நான்கு பக்க சக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி போடுவதற்கு என்னை யார் அழைத்தார்கள் என்றால் மதியழகன் அழைத்தார். யார், யார் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் நான் ஒரு கையொப்பமும், ரமேஷ் ஒரு கையொப்பம் போட்டார் , வேறு யார் கையொப்பம் போட்டார்கள் என்று நினைவில்லை. வேறு யாராவது கையொப்பம் போட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பத்திரம் எத்தனை பக்கம் எழுதுப்பட்டிருந்தது என்றால் தெரியவில்லை. எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் நினைவில்லை. பத்திரத்தில் யார் யார் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் நினைவில்லை. பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் நினைவில்லை. பத்திரம் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது, 26.11.2012-ல் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் நினைவில்லை. என்னடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விலாசத்தைதான் பத்திரத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் நினைவில்லை. நான் மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருவதற்கான ஆதார் அட்டையை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. ரமேஷ் எந்த ஊரை சேர்ந்தவர் என்றும், என்ன முகவரி கொடுத்துள்ளார் என்றும் தெரியுமா என்றால் அவர் அமரம் ஊரை சேர்ந்தவர்  ஆனால் விலாசம் தெரியாது. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.